**மினுவான்கொடை பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 யூன் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 21 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மினுவான்கொடை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு கணக்கீடு செய்யப்படாமல் ரூபா 3,125,457 புத்தகப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இருப்புக்கள் சீராக்கப்பட்டு பௌதீக இருப்பு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். | இருப்பு சீராக்கல் கணக்கு தயாரிக்கப்படுவதுடன் கூடியவிரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | ரூபா 1,310,582 தொகையான 03 கடன்கொடுத்தோர் மீதிகள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட கெப் வண்டியொன்று ரூபா 1,381,000 தொகையில் ஏலத்தில் விற்கப்பட்டிருந்த போதிலும், கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு உரிய பதிவுகள் இடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் உபயோக பதிவேடுகளின் பிரகாரமான மீதிகளுக்கும் இடையே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,952,803 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம்செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் சரிசெய்யப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 80,825 தொகையான நீர் வைப்பு மீதி மற்றும் ரூபா 6,445 தொகையான முற்பண செலவு மீதி என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பழைய முற்பண மீதி பதிவேட்டை பரீட்சித்து குழுவொன்றை நியமித்து பதிவேடுகளில் இருந்து பதிவழித்தல்களை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 5,097,989 பெறுமதியான கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சங்கங்கள் மற்றும் உரிய ஒப்பந்த நிறுவனங்களுக்கு செலுத்தவேண்டிய பணமாக இருந்ததுடன், கோரப்பட்ட பின் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 73,246,845 தொகையான மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கின் மீதிக்குரிய பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்குகளை சரிசெய்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

### 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2) | 784,907 | 2016 மற்றும் அதற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 784,907 முற்பண மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பழைய பதிவேடுகளை பரீட்சித்து குழுவொன்றை நியமித்து பதிவேடுகளில் இருந்து பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | 9,678,539 | 2011 முதல் 2016 வரை காலாவதியான வைப்புக்கள் ரூபா 9,678,539 தொகையை | ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | பதிவேடுகளை பரீட்சித்து வருமானத்திற்கு எடுக்க வேண்டிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | மேல்மாகாண - உள்ளூராட்சி ஆணையாளரின் 2018 யூலை 19 ஆம் திகதிய 2018/e - Local Government 01 - ஆம் இலக்க சுற்றறிக்கை. | இணைய தளம் ஊடாக விண்ணப்ப பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கும் கொடுப்பனவு செய்வதற்கும் பிரஜைகளுக்கு வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த வசதிகளை வழங்குதல் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 160,213,391 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 129,358,930 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | வீதவரியும் வரியும் | 34,884 | 36,205 | 37,296 | 16,487 | 34,821 | 31,837 | 21,615 | 15,341 |
| (ii) | வாடகை | 2,819 | 4,146 | 4,152 | - | 2,653 | 3,962 | 4,068 | 42 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,619 | 1,879 | 1.879 | - | 1,800 | 1,844 | 1,858 | 27 |
| (iv) | ஏனைய வருமானம் | 538 | 571 | 571 | 84 | 476 | 556 | 544 | 122 |
| | | 39,860 | 42,801 | 43,898 | 16,571 | 39,750 | 38,199 | 28,085 | 15,532 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை ஆதனவரி மீதியாக இருந்ததுடன் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 2,591,492 ஆகும். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்காக அதிக கவனம் செலுத்தப்படுகின்றது என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் பதிவழிப்பதற்கு பொருத்தமானது என இனங்கானப்பட்ட ஆதனவரி அலகுகளை பதிவேட்டிலிருந்து நீக்குவதற்காக பொதுச் சபையின் தீர்மானத்தைப் பெற்று உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 கடைகள் மற்றும் 02 ஆதனங்களை வாடகைக்கு வழங்காமையின் காரணமாக அறவிட வேண்டிய வதுருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சபையின் வருமானத்தை அதிகரித்து கொள்வது தொடர்பில் முகாரமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பத்தன்டுவன உப அலுவலக பிரதேசத்தில் 04 கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. | சட்டரீதியான விடயம் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | பத்தன்டுவன உப அலுவலகத்தில் 04 கடைகளுக்காக உடன்படிக்கையை நாளதுவரையாக்குதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### 3.1.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயலாற்றல் அறிக்கைக்கு உரித்தாக வேண்டிய தேவையான இழப்பு நட்டப் பதிவேடு, வீதி விளக்கு பதிவேடு, வீதிப் பதிவேடுகள் என்பவற்றைப் பேணிச் செல்லல் மற்றும் கட்டணங்கள் அறவிடப்படுகின்ற ஆதனங்கள் என்பன 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றலின் தேவை நிறைவேற்றப்பட வேண்டும். | இழப்பு நட்ட பதிவேடு நாளதுவரையாக்கப்படுகின்து டன், போதியளவான பதவியணியினர் இல்லாமை அடிப்படை பிரச்சினையாக காணப்படுகின்றமையினால் கூடியவிரைவில் செயற்திட்ட ஊழியர்களை சேர்த்து ஆதனங்கள் மதிப்பிடுதலை ஆரம்பிப்பற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 3.2 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக் கட்டிடத்தில் சூரிய மின் உற்பத்தி முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் | சாத்தியவள ஆய்வு ஒன்றை மேற்கொண்டு | எதிர்காலத்தில் பிரதான அலுவலகம் அமைந்துள்ள |

| | | |
|---|---|---|
| போது ரூபா 6,800,000 தொகை செலவில் "net metering" திட்ட முறைமையொன்றின் கீழ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் பிரகாரம் பகல் கால எல்லையில் மிகையான மின் உற்பத்தி அலகுகளுக்காக இலங்கை மின்சார சபையின் மூலம் எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், இரவு காலத்திற்காக மின்சார அலகுகளுக்காக ரூபா 15.40 குறைந்த கட்டணம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், இது வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு எதிர்கால நலன்கள் தொடர்பான சாத்தியவள ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், கிலோ வோல்ட் அம்பியர் (KVA) அலகிற்கு ரூபா 1,100 வீதம் மேலதிக கட்டணம் செலவிடல் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைக்கப்படாமல் இறுதி கொடுப்பனவான ரூபா 2,040,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பிரதேச சபை வளவில் அதிகூடிய மின்சார செலவினத்திற்கு தீர்வாக இது ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அலுவலக வளவிற்காக மாதாந்தம் அதிக மின்சார செலவினம் ஒன்று செலவிடப்பட்டிருந்தமையினால் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். | கட்டிடத்தை வழிப்பதனாக்கி செய்வதற்கு கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தமையினால் அதிகமாப் பயன்படுகின்றமையினால் இந்த திட்டம் நலன் வாய்ந்ததாக இருக்கும் என அறிவிக்கப்பட்டதுடன், KV அலகு அளவு செலவாகின்றமை தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்த்து வைத்தல் தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

-------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------------- | ----------------------- | ---------------------------- |
| ரூபா 9,995,440 பெறுமதியான 100 வோல்ட் LED வீதி விளக்குகளின் 728 கட்டளைகள் 2019 நவம்பர் 20 ஆம் திகதி களஞ்சியத்திற்கு கிடைத்து 2019 திசெம்பர் 06 ஆம் திகதி வரையில் அந்த சகல மின்சார உப பாகங்களும் 07 வீதிகளுக்கு பொருத்தப்பட்டிருந்ததாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சாரம்) உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2020 | சரியாக உறுதிப்படுத்தல் பெறப்பட வேண்டும். | அந்த மின் குமிழ் இருப்பு சபைக்கு கிடைத்திருந்த போதும் நகர திட்டமிடல் நீர் வழங்கள் மற்றும் உயர் கல்வி அமைச்சின் நிதி பெறுவனவு நிச்சியமற்றதாக |

| | | |
|---|---|---|
| யூன் 17 ஆம் திகதி வரையிலும் அந்த இருப்பு களஞ்சியத்தில் காணப்பட்டது. இந்த மின்சார உபகரண இருப்பின் உத்தரவாத காலம் 03 வருடங்களாக இருந்ததுடன், அது வரையில் 07 மாதங்களை கடந்திருந்த போதிலும், இந்த உபகரண இருப்பு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | இருந்தமையின் காரணமாக இந்த மின்குமிழ்களை பொருத்துதல் தாமதிக்கப்பட்டிருந்ததுடன், மின்குமிழ்களுக்கு மேற்கொள்ளப்பட்ட தினத்தில் இருந்து 03 வருட உத்தரவாத காலம் பெறப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பொருள் மெய்மெய்யாய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இறுதிக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 76,980 தொகையான கூட்டுப்பசளை பெரல்களின் இருப்பு மற்றும் ரூபா 33,948 பெறுமதியான கடல் மணல் இருப்பு என்பன பௌதீக இருப்பு கணிப்பிடுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் மெய்மையாய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கூட்டுப்பசளை பெரல்களின் இருப்பு மீதி 2020 JE - 05 மூலம் சரி செய்யப்பட்டுள்ளதுடன், கடல் மணல் இருப்பு பௌதீக ரீதியாக வேலைத்தளத்தில் காணப்பட்ட போதிலும், இருப்பு கணிப்பிடுவதற்காக வழங்குவதற்கு தவறவிடப்பட்டிருந்தது. |

**3.4.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீர் களஞ்சிய இருப்பாக காண்பிக்கப்பட்ட ரூபா 162,995 மீதி 07 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டுவரப்பட்டதுடன், அதில் எந்தவொரு இருப்பு விடயமும் 04 வருடங்களில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும். | ஹியும் குழாய்கள் தவிர ஏனைய விடயங்களை பயன்படுத்துவதற்காக கோரிக்கை விடப்படாதிருந்ததுடன், பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத தற்போது எஞ்சியுள்ள இருப்புக்களின் மீதி ரூபா 162,995 ஆகும். |

**3.5 பெறுகைகள்**

---

**3.5.1 ஒப்பந்த நிர்வாகம்**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 998,111 செலவில் கொங்கிரீட் இடப்பட்டிருந்த அஸ்கிரி வல்பொல ஹில்ம பொது வீதியை பரீட்சித்த போது வீதியின் நீளம் 253 அடி பகுதியொன்று அளவிடப்பட்டிருந்த போதிலும், கோவையின் பிரகாரம் நீளம் 592 அடிக்காக வீத கலவைக்கு (ரேட் மிக்ஸ்) ரூபா 963,583 தொகை செலுத்தப்பட்டிருந்தது. கோவையில் காண்பிக்கப்பட்ட அளவிடை அறிக்கைக்கும் பௌதீக பரிசோதனையின் போது பெறப்பட்ட அளவிடை அறிக்கைகக்கும் இடையிலான வேறுபாட்டிற்கான காரணமாக அந்த வீதியின் 03 கிலோ மீற்றரில் ஏலமிடப்பட்ட காணியின் வீதியொன்று கொங்கிரீட் இடப்பட்டதாக எழுத்து மூலம் வெளியிடப்பட்டிருந்தது. மதிப்பீடு மற்றும் அந்த அளவிடை அறிக்கையின் பிரகாரம் அதில் அவ்வாறான 02 வீதிகள் கொங்கிரீட் இடப்பட்டமை அவதானிக்கப்படாதிருந்ததுடன், அளவிடை அறிக்கை ஒரு கோடு இடப்பட்டு இரண்டாக பிரிக்கப்பட்டிருந்தது. | 02 வீதிகளுக்கு கொங்கிரீட் இடும்போது தனித்தனியாக மதிப்பீடு மற்றும் அளவிடைகள் தயாரிக்கப்பட வேண்டும். | அந்த வீதியில் இரண்டு இடங்களுக்கு கொங்கிரீட் இடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அந்த அளவிடை அறிக்கை தனித்தனியாக இனங்காண்பதற்கு முடியுமான வகையில் தயாரிக்கப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு தயாரிக்கும் போது ஒரு வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், இன்னொரு வீதியொன்றும் கொங்கிரீட் இடவேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | கம்பெரலிய கிராமிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 766,274 தொகையில் வத்துமுல்ல நெல் ஆலை வீதியில் பிரசன்ன அவர்களின் வீட்டிற்கு இரு பக்கமும் ஆன வீதிக்கு திசைக்கான வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்காக ரேட் மிக்ஸ் 37.83 | பெறுவனவு பத்திரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | 10.5 கன மீற்றர் இற்குரிய பெறுவனவு அறிக்கை கோவையில் இணைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கன மீற்றர் இடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரேட் மிக்ஸ் பட்டியலின் பிரகாரம் 32.25 கன மீற்றர் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் 37.75 கன மீற்றர் இற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 சனவரி 23 ஆம் திகதி 5.5 கன மீற்றர் இற்காக ரூபா 81,180 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 484,819 தொகை செலவில் ஹென்தி மஹர பாடசாலை ஒழுங்கையின் முதலாவது குறுக்கு வீதி பழுதுபார்ப்பதற்கு ரேட் மிக்ஸ் 31.10 கன மீற்றர் இடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 26 ஆம் திகதி எடுக்கப்பட்ட ரேட்மிக்ஸ் அறிக்கையின் பிரகாரம் 31 கன மீற்றர் ஆக கிடைக்கப் பெற்றிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ரேட்மிக்ஸ் 05 கன மீற்றர் இற்குரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கிடைக்கப் பெறாத ரேட்மிக்ஸ் இற்காக ரூபா 60,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுவனவுகளின் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அதன் போது கொங்கிரீட் பெறுவனவு அறிக்கைகளுக்குரிய 05 கன மீற்றர் அளவிற்காக பெறுவனவு அறிக்கை கோவையில் இடுவதற்கு முடியாதிருந்தமை அல்லது வேலைத்தளத்தில் காணாமல் போயிருந்தது என்ற சம்பங்கள் ஏற்பட்டிருந்தன. |